thinaboomi.com தினபூமி, புதுச்சேரி மார்ச் 14, 2025

# சென்னை காவல் ஆணையாளர் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாம்

## மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க ஆணையர் உத்தரவு



**சென்னை,மார்ச்.14**

சென்னை பெருநகர காவல் ஆணையாளர்ஆ.அருண், சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**முகாம்**

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர்ஆ.அருண், புதன்கிழமை காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த 15 பொதுமக்களிடம் இருந்து புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இ நிகழ்வின் போது, துணை ஆணையாளர் (நலன் மற்றும் எஸ்டேட்) மேகலினா ஐடன் உடனிருந்தார்.

# சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி 140வது வார்டில் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் 1.54 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்



**சென்னை,மார்ச்.14**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (13.03.2025) சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், 140வது வார்டில், அரங்கநாதன் சப்வே அருகில் உள்ள கோவிந்தன் சாலையில் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் 4 தெருக்களுக்கு 1.54 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார். பிறகு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

சென்னை மாநகரில் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபிறகு, எங்கெயெல்லாம் மழைநீர் தேக்கம் இருக்கின்றதோ அந்தப் பகுதிகளை எல்லாம் கண்டறிந்து, புதிய மழைநீர்வடிகால்வாய்களை கட்டுவதற்கு, வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்வதற்கு, உயர்மட்ட ஆலோசனை குழு நியமிக்கப்பட்டது. ஓய்வு பெற்.திருப்புகழ் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பல்வேறு பரிந்துரைகளை வழங்கியது. அக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் சென்னை மாநகரில் ஏராளமான பணிகள் நடைபெற்றது. அதாவது 510 கி.மீ தூரத்திற்கான மழைநீர் வடிகால்வாய் பணிகள் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.2,375 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று முடிந்தது. அதுமட்டுமல்லாமல் ரூ.510 கோடி செலவில் 151 கி.மீ தொலைவில் கோவளம் பேசின் பகுதியில் ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் மழைநீர் வடிகால்வாய் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. நான் ஏற்கெனவே சொன்னது போல் 20 செ.மீ அளவிற்கு மழை பொழிந்தால் அதனை தாங்கும் அளவிற்கு மழைநீர் வடிகால் சென்னையில் இருக்கின்றது. அதனை மீறி ஒரே நாளில் 35 செ.மீ அளவிற்கு மழை பொழிந்தால் மட்டுமே பாதிப்புகள் இருக்கும். இது சென்னையில் மட்டுமல்ல உலகில் வளர்ந்த நாடுகள் என்று கண்டறியப்பட்டுள்ள அமெரிக்கா, இலண்டன் போன்ற நாடுகளில் உள்ள மாநகரில் கூட பெருமழையின் போது பாதிப்புகள் எதிர் கொள்ள வேண்டிய சூழல் இருந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் முதலமைச்சர் எடுத்த விரைவான நடவடிக்கைகளின் காரணமாக சென்னையில் மழைநீர் பாதிப்புகள் அதிக அளவில் தவிர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக சைதாப்பேட்டை பகுதியில் மழைநீர் பாதிப்புகள் ஏற்கெனவே இருந்தது. சுப்பிரமணிய சாலை, திருவள்ளுவர் தெரு, ஜோதியம்மாள் நகர், ஜோதிராமலிங்கம் நகர் போன்ற பல்வேறு பகுதிகளில் சிறு அளவிலான மழை பொழிவிற்கு பெரிய அளவிலான பாதிப்புகள் இருந்தது. தற்போது அந்த பாதிப்புகள் 100% தடுக்கப்பட்டுள்ளது. தற்போது கோவிந்தன்சாலை, வடிவேல்புரம், கோடம்பாக்கம் ரோடு, கேஆர் கோவில் தெரு போன்ற பகுதிகளில் அசோக்நர் அவென்யூ சாலைகளிலிருந்து வருகின்ற மழைநீர், புஷ்பாவதி தெருவில் இருக்கின்ற கால்வாயில் ஏற்பட்டிருக்கின்ற அடைப்புகளின் விளைவாக பெரிய பாதிப்புகள் கடந்த 2 ஆண்டுகளாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலோடு, அந்த பாதிப்புகள் அகற்றும் பணிகள் நடைபெற தொடங்கி கேயார் தெருவில் 520 மீ தூரத்திற்கும், சம்வென்யூ தெருவில் 220 மீ தூரத்திற்கும், எல்லையம்மன் கோவில் தெருவில் 455 மீ தூரத்திற்கும், கோவிந்தன் சாலையில் 345 மீ தூரத்திற்கும், ஆக மொத்தம் 4 எண்ணிக்கையில் 1.54 கி.மீ தூரத்திற்கு ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் வாய் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டிருக்கிறது. அதே போல் கோவிந்தன் சாலை பகுதியில் 432 மீ தூரத்திற்கும், கலைஞர் தெரு குமரன் தெரு போன்ற பகுதிகளில் 441 மீ தூரத்திற்கும், கோவிந்தன் சாலை இன்னொரு பகுதியில் 445 மீ தூரத்திற்கும், ரெட்டிக்குப்பம் சாலையில் 4.5 மீ தூரத்திற்கும் என 1.47 கி.மீ தூரத்திற்கும் என ரூ.6.98 கோடி செலவில் புதிய மழைநீர் வடிகால் பணிகள் கட்டுவதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அதற்கும் பணி ஆணைகள் தரப்பட்டு இந்தப் பகுதிகள் அடுத்த வடகிழக்கு பகுதியில் மழை பாதிப்பே இல்லை என்கின்ற நிலை உருவாக இருக்கிறது. ஆக இன்று 1.54 கி.மீ தூரத்திற்கு ரூ.5.10 கோடி மதிப்பிலான மழைநீர் வடிகால்வாய்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. 1.74 கி.மீ தூரத்திற்கு ரூ.6.98 கோடி மதிப்பிலான மழைநீர் வடிகால்வாய் பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளது. மிக விரைவில் இந்தப் பணிகளும் தொடங்கப்பட்டு இந்தப் பகுதியில் மழைநீர் பாதிப்புகள் இல்லாத நிலை ஏற்படவிருக்கிறது.

சென்னையில் பெரிய அளவில் மழை பாதிப்புகளைச் சந்தித்த செம்மஞ்சேரி, வேளச்சேரி, பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளில் மழைநீர் பாதிப்புகளிலிருந்து காப்பாற்றப்பட்டு இருக்கிறது. மேலும் செங்கல்பட்டு மாவட்டத்திலிருக்கும் 50 ஏரிகளிலிருந்து வரும் உபரி நீர் நாராயணபுரம் ஏரியில் கலக்கும். எனவே நாராயணபுரம் ஏரியிலிருந்து பெருக்கெடுத்து வரும் உபரிநீர் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கும் மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, உள்ளகரம், புழுதிவாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளை பாதிக்கும் நிலை இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2 முறை நேரிடையாக இப்பகுதிகளுக்கு வருகை புரிந்து பாதிப்புகளை கண்டறிந்து நாராயணபுரம் ஏரியிலிருந்து இணைப்புக் கால்வாய்கள் 1000 கனஅடி நீர் வெளியேற்றும் வகையில் பிரம்மாண்டமான கால்வாய்களை அமைக்க அறிவுறுத்தினார்கள். கடந்த மழைக்கு தற்காலிகமாக கால்வாய் கட்டப்பட்டது. இந்த வருட பருவ மழைக்கு நிரந்தமாக கால்வாய் கட்டும் பணிகள் முடிவுற்றபிறகு இந்தப் பகுதிகளில் ஏற்படும் மழைநீர் பாதிப்புகள் முழுமையாக நீக்கப்படவிருக்கிறது என்றார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதர், சுப்பிரமணி, மண்டல அலுவலர் முருகேசன், செயற்பொறியாளர்இனியன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சென்னை எம். எம். டி. ஏ. காலனியில் மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின் கீழ் தானியங்கி துணிப்பை விற்பனை இயந்திரம்

## மேயர் ஆர்.பிரியா திறந்து வைத்தார்




**சென்னை,மார்ச்.14**

மேயர் ஆர். பிரியா (13.03.3025) அண்ணாநகர் மண்டலம், வார்டு-106, எம். எம். டி. ஏ. காலனி பிரதான சாலை, தபால் நிலையம் அருகில் "மீண்டும் மஞ்சப்பை" திட்டத்தின் கீழ் தானியங்கி துணிப்பை விற்பனை இயந்திரத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது :முதலமைச்சர் அவர்களால், பெருநகர சென்னை மாநகராட்சியில் 2021 ஆம் ஆண்டு "மீண்டும் மஞ்சப்பை" என்ற திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியும், சுற்றுச்சுழல் துறையும் இணைந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிளாஸ்டிக்கைத் தவிர்க்குமாறு விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறோம். பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மீண்டும் மஞ்சப்பை என்ற தானியங்கி விற்பனை இயந்திரம் வைத்திருக்கிறோம். இதன் மூலமாக, மார்க்கெட் பகுதிகளில் இருக்ககூடிய பொதுமக்களோ, வியாபாரிகளோ, மஞ்சப்பைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 25 இயந்திரங்கள் பொறுத்தப்பட்டிருந்தது, இன்றைக்கு இரண்டாம் கட்டமாக 17 இயந்திரங்கள் பொறுத்தப்பட்டு இருக்கிறது பொதுமக்கள் நெகிழிப்பைக்கு மாறாக மஞ்சப்பை பயன்படுத்துவதற்கு தொடர்ந்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கடந்த நிதிநிலை அறிக்கையில் 50 ஆயிரம் மஞ்சப் பைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த ஆறு மாதத்திலேயே 50 ஆயிரம் மஞ்சப்பைகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மக்களுக்கு மஞ்சப்பை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பணி நடைபெற்று வருகிறது. கடந்த ஒரு ஆண்டில் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தும் விற்பனையாளர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் பொருட்கள் வாங்க கடைகளுக்குச் செல்லும் போது மஞ்சப்பையை எடுத்து வந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் துணிப்பையானது தொடர்ந்து 15 முறையாவது பயன்படுத்த முடியும். அதே சமயம் பிளாஸ்டிக் பைகள் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படுகிறது. மேலும் சிலரால் நீர்வழிக் கால்வாய்களில் தூக்கி எறியப்படுகிறது இதன் காரணமாக கால்வாய்களில் வெள்ளநீர் செல்வதற்கு தடை ஏற்படுகிறது. மேலும் தரையில் வீசப்படும் பிளாஸ்டிக் பைகள் மக்குவதற்கு நீண்ட காலம் பிடிப்பதோடு சுற்றுச் சூழல் பாதிப்பும் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் விழிப்புணர்வுடன் அடுத்த தலைமுறையினரை காக்கின்ற வகையில் மஞ்சப்பை பயன்பாட்டை மேற்கொள்ள வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியில் வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களின் விளம்பரப் பலகைகளில் தமிழில் பெயர் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர்எம்.கே.மோகன், மத்திய வட்டார துணை ஆணையர்கே.ஜெ.பிரவீன் குமார், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர்ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் திரு.நே.சிற்றரசு (பணிகள்), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர்.கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர்அதியமான் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை வண்ணாரப்பேட்டை காமாட்சியம்மன் கோயிலில் பூச்சொரிதல் உற்சவம்



**சென்னை, மார்ச் – 14**

சென்னை வண்ணாரப்பேட்டை காமாட்சியம்மன் கோவிலின் பூச்சொரிதல் விழாவினையொட்டி நடைபெற்ற முளைப்பாரி ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர்.

**உற்சவம்**

சென்னை வண்ணாரப்பேட்டை காமாட்சியம்மன் திருக்கோவிலின் 27 வது பிரமோற்சவ பெருவிழாவின் , 11 வது நாள் உற்சவமாக பூச்சொரிதல் விழா நேற்று நடைபெற்றது, இதனையொட்டி சிங்காரத்தோட்டம் தலைச்சுமை வியாபாரிகள் நலச்சங்கத்தின் சார்பில் முளைப்பாரி ஏந்தி பக்தர்கள் ஊர்வலம் நடைபெற்றது, இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு \200 பூக்கூடைகள் பழங்கள், மாவிளக்குகள் அம்மன் பாதத்தில் சீர்வரிசையாக சாற்றப்பட்டன,

இந்த ஊர்வலத்தில் ஏராளமான குழந்தைகள் அம்மன் வேடமணிந்து நடனமாடி வந்தனர், முளைப்பாரி ஊர்வலத்தை ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி துவக்கி வைத்தார், தலைச்சுமை வியாபாரிகள் நலச்சங்கத்தின் தலைவர் பி.எஸ்.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் செயலாளர் ராஜா, துணைத்தலைவர்கள் ஏ.சி.சரவணன் சின்னசாமி , ஏ.ஆர்.ராஜூ, மனோகரன் பொருளாளர் தீனதயாளன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெண்களுக்கு எவர்சில்வர் பாத்திரங்கள், குங்கும சிமிழ்கள் பரிசாக வழங்கப்பட்டன. ,

சென்னை வண்ணாரப்பேட்டை காமாட்சியம்மன் கோவிலில் அம்மனுக்கு பக்தர்கள் முளைப்பாரி மற்றும் சீர்வரிசை பொருட்கள் சாற்றிய காட்சி காமாட்சியம்மன் கோவிலின் பூச்சொரிதல் உற்சவத்தில் அம்மன்வேடமணிந்து நடனமாடிய குழந்தைகளுக்கு ஐட்ரீம் மூர்த்தி எம்எல்ஏ பரிசுகளை வழங்கி பாராட்டினார்,

# பார்க்கிங் இடம் இல்லாவிட்டால் கார் வாங்க முடியாது: சென்னை மாநகராட்சியில் விரைவில் அமலுக்கு வருகிறது

**சென்னை மார்ச் 14-**

சென்னை மாநகராட்சியில் கார் நிறுத்தத்திற்கு இடம் இருந்தால் மட்டுமே புதிய கார் வாங்கும் வகையில் புதிய விதிமுறை விரைவில் அமலுக்கு வருகிறது. சாலை ஓரங்களில் நிற்கும் கார்களால் இடையூறு ஏற்படுவதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிதாக கார் வாங்குபவர்கள், காரை பதிவு செய்யும்போது அதற்கான பார்க்கிங் இடம் இருப்பதை உறுதி செய்து, அதற்கான சான்றை இணைப்பதை கட்டாயமாக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆணையம் பரிந்துரை அளித்துள்ளது. இதன்படி, ஒருவர் எத்தனை காரை பதிவு செய்ய விரும்புகிறாரோ, அத்தனை காருக்குமான பார்க்கிங் வசதி இருப்பதற்கான ஆவணத்தை காட்ட வேண்டும் என்பது அவசியம்.ஒவ்வொரு பகுதியிலும் அதிக தேவை, நடுத்தர தேவை மற்றும் குறைந்த தேவை என மூன்று வகையான பார்க்கிங் உருவாக்கப்பட உள்ளது. அதற்கு கட்டணத்தை செலுத்தி கார்களை பார்க்கிங் செய்யும் இடம் என காட்டி பதிவு செய்து கொள்ளலாம். அதேபோல அகலமான சாலைகளில் பார்க்கிங் உருவாக்கப்பட்டு அந்த இடங்களில் கார்களை நிறுத்திக் கொள்ளலாம். மேலும் குடியிருப்பாளர்கள், மால்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், அலுவலகங்கள் என அனைத்து இடங்களிலும் பொதுமக்களுக்கான பார்க்கிங்கை உருவாக்க வேண்டும் எனவும், 20% மின்சார கார்களின் சார்ஜிங் ஸ்டேஷனுக்கு ஒதுக்க வேண்டும் எனவும், சென்னை பெருநகர போக்குவரத்து ஆணையம் தமிழக அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. இந்த பரிந்துரை சட்டமாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



**வளசரவாக்கம் மண்டலம் 144 வது வார்டு மதுரவாயல் பெருமாள்கோயில்தெருபகுதியில்இளைஞர்கள்விளையாட விளையாட்டு திடல் அமைக்கும் பணிகளை மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின் ஆய்வு செய்தனர்.**

# வீட்டின் வாசலில் விளையாடியபோது மழைநீர் கால்வாயில் விழுந்து 3 வயது குழந்தை படுகாயம்

**சென்னை மார்ச் 14-**

பெருங்குடி அருகே வீட்டின் வாசலில் விளையாடிய போது மழைநீர் கால்வாயில் விழுந்து 3 வயது குழந்தை படுகாயமடைந்தது. சென்னை பெருங்குடி, சீவரம் மாருதி நகர் 2வது பிரதான சாலை பகுதியை சேர்ந்தவர் உதயன் (30). இவரது மனைவி மீனா (25). யோகா பிரதிக்ஷா (3) மற்றும் ஒன்றரை வயதில் குழந்தை உள்ளது. கடந்த ஒரு வருடமாக அப்பகுதியில், மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.அந்த வகையில், சீவரம் மாருதி நகர் உள்ளிட்ட தெருக்களில் சென்னை மாநகராட்சி சார்பில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக பள்ளங்கள் தோண்டப்பட்டு, அங்கு எந்தவித தடுப்புகளும் அமைக்கப்படாமல் தொடர்ந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சுமார் 7.20 மணியளவில் உதயன் வீட்டின் வாசலில், அவரது மகள் யோகா பிரதிக்ஷா விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது, மழைநீர் கால்வாய்க்கு தோண்டப்பட்ட பள்ளத்தில் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கி இருந்த நிலையில், எதிர்பாராதவிதமாக குழந்தை யோகா பிரதிக்ஷா பள்ளத்தில் விழுந்துள்ளது.இதனை கண்ட, அக்கம் பக்கத்தினர் மழைநீர் கால்வாய் பள்ளத்தில் விழுந்த குழந்தையை மீட்டு, அருகே உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

அங்கு, குழந்தைக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக சோழிங்கநல்லூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு, படுகாயமடைந்த குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து, துரைப்பாக்கம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஓசூர் அம்மன் திருக்கோயிலில் மஹா கும்பாபிஷேக விழா



**திருவள்ளூர்,மார்ச்,14.**

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம் கூடப்பாக்கம் ஊராட்சியில் உள்ள மதுரா மேட்டு கண்டிகை கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ ஓசூர் அம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் முன்னிலையில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவை முன்னிட்டு கோயில் வளாகத்தில் பல்வேறு பூஜைகள் நடைபெற்றது.பின்னர் கோவில் கலசத்தில் சிவாச்சாரியார்கள் கலச நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்தனர். விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர்.அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் கே.என்.எஸ் மற்றும் கே.இ.ஆர் மற்றும் கே.வி. என் நிர்வாகிகள் மற்றும் கிராம பெரியோர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# ஆண் செவிலியரை மிரட்டி தங்கச்செயின் மற்றும் செல்போன் பறித்த 4 பேர் கைது

**சென்னை மார்ச் 14-**

சென்னை, வடபழனி, சோமசுந்தரம் பாரதியார் நகரில் வசித்து வரும் பிரசாந்த், என்பவர் வடபழனி பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் செவிலியராக வேலை செய்து வருகிறார்.

**செல்போன் பறிப்பு**

பிரசாந்த் திருமணம் ஆகாததால் ஆண்களுடன் இயற்கைக்கு மாறான உறவில் ஈடுபட்டு வந்துள்ளார். பிரசாந்த் நேற்று முன் தினம் காலை செல்போன் செயலி மூலம் ஒரு ஆணை தொடர்பு கொண்டு சாலிகிராமம், திருவள்ளுவர் தெருவில் உள்ள மறைவான இடத்திற்கு வருமாறு கூறியுள்ளார். செல்போன் செயலி மூலம் தொடர்பு கொண்ட நபர் மேற்படி இடத்திற்கு வந்து பிரசாந்திடம் தனிமையில் இருந்த போது, அந்த நபர் அவரது 3 நண்பர்களை போன் மூலம் தொடர்பு கொண்டு சம்பவயிடத்திற்கு வரவழைத்து புகார்தாரர் பிரசாந்தை மிரட்டி கையால் தாக்கி அவரிடமிருந்து 1 சவரன் தங்கச்செயின் மற்றும் செல்போனை பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து பிரசாந்த் விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாணைமேற்கொண்டனர்.

விருகம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.லோகேஷ், 2.சஞ்சய், 3.வனத்தை சின்னப்பன் (எ) ஆகாஷ், 4.சந்திரன், ஆகிய 4 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 சவரன் தங்கச்செயின் பறிமுதல் செய்யப்பட்டது.

# மண்டலத்தை பிரிக்க எதிர்ப்பு பதாகைகளுடன் வந்த அதிமுக கவுன்சிலர்கள்

**சென்னை மார்ச் 14-**

மணலி மண்டல குழு மாதாந்திர கூட்டம் தலைவர் ஏ.வி.ஆறுமுகம் தலைமையில் நேற்று முன் தினம் நடந்தது. செயற்பொறியாளர் தேவேந்திரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கவுன்சிலர்கள், அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். அப்போது அதிமுக கவுன்சிலர்கள் முல்லை ராஜேஷ் சேகர், ஸ்ரீதர், ஜெய்சங்கர் ஆகியோர், மணலி மண்டலத்தை பிரித்து மாதவரம் மற்றும் திருவொற்றியூர் மண்டலத்தில் சேர்க்ககூடாது.எப்பொழுதும் போலவே மணலி மண்டலமாக இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கையில் பதாகைகளுடன் கோஷமிட்டபடி மண்டல அலுவலக வாசலுக்கு வந்தனர். பின்னர் பதாகைகளை ஏந்தியபடியே மண்டல குழு கூட்டத்தில் பங்கேற்ற அதிமுக கவுன்சிலர்கள், மணலி மக்களின் கோரிக்கைகளை ஏற்று அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கோரினர். இதை தொடர்ந்து கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட மக்கள் நல பணிகள் மீது விவாதம் நடந்தது. 65 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



புதுச்சேரி மறைமலை அடிகள் சாலை உப்பனார் கால்வாய் பால கட்டுமான பணிக்கான பூமி பூஜை துணைநிலை ஆளுநர் கைலாஷ் நாதன் தொடங்கி வைத்தார். அருகில் முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், அமைச்சர் லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் நேரு, தலைமைச் செயலாளர் சரத் சவுகான், பொதுப்பணி துறை செயலர் முத்தம்மா, துணைநிலை ஆளுநரின் செயலர் மணிகண்டன், கலெக்டர் குலோத்துங்கன், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீன தயாளன் கலந்து கொண்டனர்.

# கடலாடித்தாங்கல் கிராமத்தில் நகரும் நியாய விலைக்கடை: மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



**செஞ்சி மார்ச்-14,**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் வேலந்தாங்கல் ஊராட்சி கடலாடிதாங்கல்கிராமத்தில் செம்மேடுதொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில்நகரும் நியாய விலை கடை தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர் அன்னம்மாள் ஆபிரகாம், ஊராட்சி மன்ற தலைவர் மார்ட்டின் புஷ்பராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டுறவு சங்க செயலாளர் லோகநாதன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நகரும் நியாய விலை கடையை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரருக்கு ரேஷன் பொருட்களை வழங்கிசிறப்புரையாற்றினார்.

நி கழ்ச் சி யில் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, வார்டு உறுப்பினர்கள் ஆல்பர்ட் குரான்,அந்தோணிசாமி நிர்வாகிகள் ஆபிரகாம், வேலு, செல்வராஜ், சேவியர், புஷ்பநாதன், புஷ்பராஜ்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரியடுத்த கோட்டகுப்பம் நகராட்சிக்குட்பட்ட தந்திராயன் பகுதியில் ரேஷன் கடை கட்டுமான பணிக்கான பூமி பூஜை நகர மன்ற தலைவர் எஸ் எஸ் ஜெயமூர்த்தி தலைமையில் நடந்தது. இதில் ஆணையர் புகேந்திரி, செயற்பொறியாளர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் எஸ் சரவணன், மெஹருன்னிஷா பங்கேற்றனர்.

## செம்மேடு சர்க்கரை ஆலை முன்

# தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை ஆர்ப்பாட்டம்



**செஞ்சி,மார்ச்.14.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்துள்ள செம்மேடு தனியார் சர்க்கலை ஆலை முன் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் கோரிக்கை ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கோரிக்கை ஆர்ப்பாட்டத்திற்கு மாநில துணை தலைவர் டி.ஆர்.குண்டுரெட்டியார் தலைமை தாங்கினார். கிளை சங்க செயலர் சுரேஷ்குமார், விநாயகம், சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில தலைவர் வேல்மாறன், மாவட்ட செயலர் ஆர். டி.முருகன், செஞ்சி வட்ட தலைவர் கோ.மாதவன், துணைத்தலைவர் நரசிம்மராஜன், இணை செயலர் சம்பத், செயலர் சிவன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கூட்டத்தில் மத்திய அரசு ஒரு டன் கரும்புக்கு ஆதார விலை ரூ 5500 வழங்க வேண்டும், தமிழக அரசே வரும் சட்ட மன்ற கூட்டத்தொடரில் வருவாய் பகிர்வு சட்டத்தை ரத்து செய்து மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டும். மாநில சர்க்கரை துறையே விழுப்புரம் முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீசர்க்கரை ஆலை 2004, 2005 மற்றும் 2008, 2009 கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய லாபத்தின் பங்கு தொகையினை விரைவில் வழங்கிட நீதி மன்றத்தின் உத்தரவுபட நடவடிக்கை எடுக்க கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

செம்மேடு சர்க்கரை ஆலை சங்க நிர்வாகிகள் சபாபதி, துரைசாமி, சேகர், எத்திராஜ், சக்திவேல், ஏழுமலை, சங்கர், வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலர்கள் வேலை நிறுத்தம்



**செஞ்சி,மார்ச்.14.**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் வியாழக்கிழமை ஈடுபட்டனர்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் வளர்ச்சித்துறை அலுவலர்களின் 21 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசை வலியுறுத்தி மாநிலந்தழுவிய அளவில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட்டனர். இதனால் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் ஊழியர்கள் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது.

வேலை நிறுத்ததில் ஊராட்சி செயலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியியல் பிரிவு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை அலுவலர்களுக்கும் பங்கேற்றனர்.

இதன் காரணமாக மேல்மலையனூர் மற்றும் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலங்கள் வெறிச்சோடி காணப்பட்டது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து செஞ்சியில் பொதுக்கூட்டம்




**செஞ்சி மார்ச்-14,**

விழுப்புரம் வடக்கு மாவட்டதிமுக சார்பில் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி செஞ்சி திருவண்ணாமலை சாலை கலைஞர் திடலில்நேற்று இரவு நடைபெற்றது.

கூட் டத் திற் கு செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும் ,செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.மேல் மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்கிறார் .

செஞ்சி நகர கழக நிர்வாகிகள் பார்சுதுரை, சங்கர், செல்வமணி, சுமித்ரா சங்கர், நெடுஞ்செழியன், காளி சுப்பிரமணி, ஜே .எஸ். சர்தார், சம்பத், பழனி ,பொன்னம்பலம், அண்ணாதுரை ,டிப்டாப் மாணிக்கம், அன்புச் செல்வன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், தலைமை கழக பேச்சாளர்கள் ஈரோடு இறைவன், ஆலந்தூர் மலர்மன்னன் ஆகியோர் கலந்து கொண்டு ஒன்றிய பாஜக அரசை கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ பேசுகையில்:

தமிழ்நாட்டில் திராவிடம் ஆனால் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு எண்ணற்ற திட்டங்களை செய்து கொண்டிருக்கிறார் இந்தியாவை ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் அனைத்து துறைகளிலும் பல்வேறு வளர்ச்சிகள் அடைந்து வருகிறது.குறிப்பாக பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை முதலமைச்சர் செய்து வந்து கொண்டிருக்கிறார்

இது போன்ற திட்டங்களைஒன்றிய பாஜக அரசால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை அந்த வகையில் தமிழ் நாட்டுக்கு செலுத்த வேண்டிய ஜிஎஸ்டி வரியை வழங்காமலும், மும்மொழி கொள்கையை ஏற்றால்தான் கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய நிதியை வழங்குவோம் என்றும்மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் ஹிந்தியை திணிக்க ஒன்றிய பாஜக அரசு முயற்சி செய்து வருகிறது மேலும் நாடாளுமன்ற தொகுதிகளையும்குறைக்கும் நடவடிக்கையை ஒன்றிய பாஜக அரசு மேற்கொண்டு வருகிறது

அ மெ ரிக் கா வுக்கு வேலைக்குச் சென்ற இந்தியர்களை வெ ளி யேற் றும் போது கையில் விலங்கு மாட்டி இந்தியாவுக்கு அனுப்பிய போது அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து ஒரு வார்த்தை கூட பேசாத மோடி தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கு மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்தியர்களுக்கு விரோதமானவர் பிரதமர் மோடி என்றும்

10 பணக்காரர்களுக்கு அடிமைப்பட்டுக் கொண்டு இந்திய நாட்டை பணக்காரர்களுக்கும் கார்ப்பரேட் கம்பெனிக்கும் அடகு வைத்துக் கொண்டுஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர் தான் பிரதமர் மோடி, என குற்றம் சாட்டினார்.

முன்னதாக மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்திய திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் , தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை ஆயிரக்கணக்கான பொதுமக்களுடன் திமுக நிர்வாகிகள் ஏற்றுக் கொண்டன

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன் ,சீதாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா ,தலைமை செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர் , மாவட்ட துணை செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார் ,அருணகிரி, மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை ,மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ் ,வீடுர் ரவி, பாலகிருஷ்ணன், சாந்தி ஏழுமலை, ஒன்றிய கழக செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், அண்ணாதுரை, சொக்கலிங்கம், ராஜா ராம், மணிமாறன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், துரை, இளம்வழுதி, செழியன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத். பேரூராட்சிமன்ற தலைவர் முருகன், செஞ்சி ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மேல்மலையனூர் ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், அனந்தபுரம் பேரூராட்சி துணைத்தலைவர் அமுதா கல்யாண் குமார், மாவட்ட கவுன்சிலர்கள் அகிலா பார்த்திபன், செல்விராம சரவணன், அன்பு செழியன் ,புஷ்பவல்லி குப்புராஜ், விஜயன், மனோ சித்ரா ராஜேஸ்வரன், ஏழிலரசி ஏழுமலை, உள்ளிட்ட மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் திமுக கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

## கடலூர் மாவட்டத்தில்

# சரக்கு இறக்குமதி, ஏற்றுமதியாளர்கள் கடலூர் துறைமுக வசதிகளை பயன்படுத்தி இறக்குமதி, ஏற்றுமதி செய்து பயன்பெறலாம்

## கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தகவல்

**கடலூர்,மார்ச்.14.**

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் பல்வேறு முன்னெடுப்புகளின் பலனாக, நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கையின் காங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆகஸ்டு-2024 முதல் துவக்கப்பட்டு, தற்போது 150 பயணிகள் பயணிக்கும் "சிவகங்கை" என்ற கப்பல் வாரத்திற்கு 6 நாட்கள் (செவ்வாய் நீங்கலாக) இருவழிகளிலும் இயக்கப்பட்டு, வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இதனை தொடர்ந்து தமிழ்நாடு கடல்சார் வாரியம், மாலத்தீவு, இலங்கையிலுள்ள திரிகோணமலை, காங்கேசன்துறை மற்றும் பிற இடங்களுக்கு கடலூர், துறைமுகத்திலிருந்து சிறிய கப்பல், தோணிகளை இயக்கி சரக்கு கையாள முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

சந்தை நிலவரப்படி, இலங்கைக்கு வேளாண் பொருட்கள், கட்டுமான பொருட்கள் மற்றும் இதரநுகர்வுப் பொருட்கள் போன்ற 75,000 மெட்ரிக் டன் சரக்குகள் ஆண்டொன்றுக்கு கடல் வழியாக கையாள வாய்ப்புகள் இருப்பதாகவும், இது அடுத்துவரும் ஆண்டுகளில் பன்மடங்காக அதிகரிக்கவும் வாய்ப்புகள் இருப்பதாக தெரியவருகிறது.

கடலூர் துறைமுகத்தில் சிறிய அளவிலான பாய்மரக் கப்பல்கள்(தோணிகள்), மிதவைகள் கையாளுவதற்குத் தேவையான அடிப்படை கட்டமைப்புகளுடன், சுங்கம் *(Customs)*, குடிவரவு *(immigration)*, சுகாதாரத்துறை *(Port Health)* ஆகிய துறைகள் உள்ளன.

சரக்கு இறக்குமதி ஏற்றுமதியாளர்கள், முகவர்கள் மற்றும் மரக்கல மிதவை உரிமையாளர்கள் ஆகியோர் இத்துறைமுகத்தில் அமைந்துள்ள வசதிகளை பயன்படுத்தி, சாக்கு இறக்குமதி, ஏற்றுமதி செய்து பயன்பெறலாம்.

இத்துறைமுகத்தின் வாயிலாக சரக்கு இறக்குமதி, ஏற்றுமதி செய்வது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு துறைமுக அலுவலகத்தை 04142-238025, 04142-238026 ஆகிய தொலைபேசி எண்கள் முலம் தொடர்பு கொண்டு தகவல்களை அறிந்து கொள்ளலாம் என கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் மாவட்டம் அரும்பட்டு ஊராட்சியில்

# செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி



**விழுப்புரம்,மார்ச்.14.**

விழுப்புரம் மாவட்டம்திரு வெண் ணெய் நல் லூர் ஊராட்சி ஒன்றியம்அரும்பட்டு ஊராட்சியில்தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

புகைப்படக் கண்காட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று முதல் பணியாக ஐந்து முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்டுநடைமுறைப்படுத்திய திட்டங்களான அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதிஉதவி

ரூ.4000- வழங்கும் திட்டம்விடியல் பயணத் திட்டம் முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைபெறும் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து புகைப்படங்கள் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இடம்பெற்றிருந்தன.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சரின் 1 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம்உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்'மக்களை தேடி மருத்துவம்'' 'இல்லம் தேடிக் கல்வித்திட்டம்முதலமைச்சரின் காலைஉணவுத் திட்டம்புதுமைப்பெண் திட்டம்தமிழ்ப்புதல்வன் திட்டம்மகளிர் உரிமைத் திட்டம்களஆய்வில் முதலமைச்சர் திட்டம்'மக்களுடன் முதல்வர்'' திட்டம்உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டம் 'தமிழ்ப்புதல்வன் திட்டம்

இருளர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தேவையான நலத்திட்டங்கள்இலங்கை தமிழர்களுக்கான நலத்திட்டங்கள்அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான திட்டங்கள் தமிழ்நாடு முதல்வரின் கனமழை மற்றும் வெள்ள மீட்புபணி ஆய்வுபுகைப்படங்கள் உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்ததை அரும்பட்டு ஊராட்சியினைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# புதுச்சேரியில் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.2500 வழங்கும் முதல்வர் ரங்கசாமி

## வி.பி.ராமலிங்கம் எம்.எல்.ஏ. பாராட்டு



**புதுச்சேரி மார்ச் 14**

புதுச்சேரி ராஜ் பவன் தொகுதி பொறுப்பாளரும் நியமன சட்டமன்ற உறுப்பினருமான வி பி ராமலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் புதுச்சேரி சட்டசபையில் என் டி ஏ கூட்டணி அரசின் முதல்வர் ரங்கசாமி நேற்று முன்தினம் 2025 மற்றும் 26 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 13 ஆயிரத்து 600 கோடிக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார் பட்ஜெட்டில் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதலுக்கும் ஆதரவுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் மேலும் மத்திய அரசின் ஒத்துழைப்பாலும் ஒருங்கிணைந்த முயற்சிகளாலும் வளர்ச்சி சமூக நலத் திட்டங்களை கடந்த நான்கு ஆண்டுகளில் தொடர்ச்சியாக செயல்படுத்தி உள்ளோம் என்று கூறியுள்ளதும் ஏழை எளியவர் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த சமச்சீரான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது என்று கூறியதுடன் 2025 மற்றும் 26 ஆம் நிதி ஆண்டில் பட்ஜெட் திட்ட மதிப்பு ரூபாய் 13 ஆயிரத்து 600 கோடியாக நியமிக்கப்பட்டுள்ளது என்றும் இதில் அரசின் மொத்த வருவாய் ரூபாய் 70611.40 கோடி பேரிட நிவாரண நிதியுடன் சேர்த்து மத்திய அரசு நிதி உதவி 3432.18 கோடி என மத்திய அரசின் பங்களிப்பு கூறியதுp எதிர்க்கட்சிகள் கூறும் மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்பதை சட்டசபையில் முதல்வர் ரங்கசாமி NDA கூட்டணியின் பங்களிப்பு என்பதை உறுதிப்படுத்தி எதிர்க்கட்சிகளின் பொய் முகத்தை வெளி கொண்டு வந்துள்ளார்

மேலும் 2025- 26 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் விவசாய தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணமாக 2000 வழங்கப்படும், ரேஷன் அட்டைகளுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச அரிசியுடன் இரண்டு கிலோ இலவச கோதுமை வழங்கப்படும், அரசு மற்றும் அனைத்து அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும் மாலை சிற்றுண்டி வழங்கப்படும், வாரம் மூன்று நாள் வழங்கப்படும் முட்டை இனிவாரத்தில் அனைத்து நாட்களும் வழங்கப்படும், ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயின்று இளநிலை கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூபாய் 2000 உதவித்தொகை வழங்கப்படும், முதியோர் உதவி பெறும் மீனவப் பெண்கள் உயிரிழப்பு ஈமச்சடங்கு தொகை 15 ஆயிரத்திலிருந்து 20,000 ஆக உயர்வு, புதுச்சேரி இ.சி.ஆர். பகுதியில் அமைய உள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு முன்னாள் பாரத பிரதமர் வாஜ்பாய் சூட்டப்படும், மற்றும் குடும்ப தலைவிகளுக்கு ரூபாய் ஆயிரத்தில் இருந்து ரூபாய் 2500 வழங்கப்படும் என்பது போன்ற பல்வேறு நல திட்டங்களை அறிவித்துள்ளது பாரத பிரதமரின் பெஸ்ட் புதுச்சேரி மற்றும் சிறந்த மாநிலமாக திகழக்கூடிய திட்டங்கள் மேலும் மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே ஆட்சி என்பதையும் வரும் காலத்திலும் புதுவை மட்டுமின்றி இந்தியா முழுவதும் என். டி. ஏ. கூட்டணி மாபெரும் வெற்றி பெறும் என்பதையும் நிரூபித்துள்ளது இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# குப்பனத்தம் கிராமத்தில் ரம்ஜான் நோன்பு திறப்பு விழா



**செங்கம் மார்ச்14**

செங்கம் ஒன்றியம் குப்பனத்தம் கிராம மசூதியில் ரம்ஜான் நோன்பு திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பட்டேல் தஸ்தகீர் தலைமை தாங்கினார். முத்தவல்லி ஜாகீர் முன்னிலை வகித்தார். பொருளாளர் சமியுல்லா வரவேற்று பேசினார். விழாவில் சிறப்பு அழைப்பாளராக செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி கலந்துகொண்டு நோன்பு திறப்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து நோன்பு குறித்து சிறப்பித்து பேசினார். உடன் திமுக நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர் பிரபாகரன் ஒன்றிய செயலாளர்கள் கோலாப்பாடி செந்தில் அந்தனூர் மனோகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்

